


அடைக்கலம் கொடுத்தது, பயிற்சி கொடுத்தது, ஆயுதம் வாங்க உதவி செய்தது. இந்த மூன்றும்தான் செப்டெம்பர் 11 சம்பவம் தொடர்பாக ஜமா இஸ்லாமியாவுக்கு இருந்த பங்கு. இன்னும் சொல்வதென்றால், வந்த விருந்தாளிகளுக்கு உட்கார வைத்து பிரியாணி போட்டது, கைச்செலவுக்குக் காசு கொடுத்தது, எதிர்கால சதித் திட்டங்கள் குறித்துக் கலந்துரையாடியது என்று நாலைந்து அடுக்கலாம்.

ஜமாவுக்கும் அல் காயிதாவுக்குமான தொடர்பு, இந்தச் சம்பவத்தின் மூலம் அத்தனை தேசத்து உளவுத் துறைகளுக்கும் வெட்ட வெளிச்சமாகிவிட்ட பிறகு, கிழக்காசியாவெங்கும் ஜமா இஸ்லாமியாவின் ஆட்களைத் தேடித்தேடிக் கைது செய்யும் படலம் 2001 அக்டோபருக்குப் பிறகு ஆரம்பமானது.

இந்த விஷயம் பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ளாத ஜமா இஸ்லாமியா, தனிப்பட்ட முறையில் சில அமெரிக்க இலக்குகளைக் குறிவைத்து, பேட்டை அளவில் சில தாக்குதல்களை உத்தேசித்து, திட்டமிட ஆரம்பித்தது. குறைந்தது இரண்டு அல்லது மூன்று தேசத்து அமெரிக்கத் தூதரகங்களையாவது வெடி வைத்துத் தகர்ப்பது என்பது அவர்களுடைய பிரதானமான திட்டம். ஆப்கனிஸ்தானிலும் பிலிப்பைன்ஸிலும் நன்கு பயிற்சி பெற்ற சுமார் அறுபது போராளிகளை இத்திட்டத்துக்காகப் பிரத்தியேகமாகப் பயிற்சியளித்துத் தயார் செய்துகொண்டிருந்தார் ஹம்பாலி.

ஆனால், டிசம்பர் 2001-ல் அவர்கள் சற்றும் எதிர்பாராதவிதத்தில் மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் இருந்த ஜமாவின் சில ரகசிய முகாம்களை, சிங்கப்பூர் மற்றும் மலேசிய போலீஸார் சுற்றி வளைத்து சர்வ நாசம் செய்துவிட்டார்கள். ஒரு தலை கூட மிஞ்சவில்லை. அத்தனை பேரையும் சுட்டுத் தீர்த்து விட்டார்கள். அங்கிருந்த வெடிபொருள்கள், ஆயுதங்கள் அனைத்தும் கைப்பற்றப்பட்டன. கூடாரங்கள் இருந்த சுவடே தெரியாத வண்ணம் நிர்மூலமாக்கிவிட்டே வீட்டுக்குப் போனார்கள்.

ஜமா இஸ்லாமியாவின் சரித்திரத்தில் அம்மாதிரியான ஒரு மாபெரும் எதிர்ப்பு - தோல்வி - சரிவு, அதற்குமுன் ஏற்பட்டதில்லை. ஆதலால், முதலில் கொஞ்சம் வெலவெலத்துப் போனார்கள். சிலிர்த்து எழுந்து அல் காயிதா ஸ்டைலிலேயே ஒரு அமெரிக்கப் போர்க்கப்பலைத் தகர்க்கும் புதிய திட்டம் ஒன்றைத் தீட்டினார்கள்.

கிழக்குக் கடலில் மீன்களைக் காட்டிலும் அதிகம் மேய்பவை அமெரிக்கக் கப்பல்கள்தான். போர்க் கப்பல்களும் வரும், வர்த்தகக் கப்பல்களும் வரும். எதைத் தாக்குகிறோம் என்பது முக்கியமல்ல; பாதிப்பு மிகப் பெரிய அளவில் இருக்க வேண்டும் என்றார் ஹம்பாலி. தோல்வியின் வெறி அவரை உசுப்பேற்றியிருந்தது.

ஆனால், அதிர்ஷ்ட அல்லது துரதிருஷ்டவசமாக அந்தத் திட்டமும் நிறைவேற்றப்படவில்லை. கிழக்காசிய நாடுகள் அனைத்துமே விழித்துக் கொண்டு, ஜமாவின் கூடாரங்களைச் சல்லடை போட்டுத் தேடிக்கொண்டிருந்தன. மறுபுறம் சர்வதேச உளவு அமைப்புகள் ஒருங்கிணைந்து, ஜமாவின் நெட் ஒர்க்கைக் கண்டுபிடித்து அழிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கியிருந்தன. டிசம்பர் 2001 மற்றும் ஜனவரி 2002 ஆகிய இரு மாதங்களில் மட்டும் ஜமா இஸ்லாமியாவின் முக்கியத் தலைவர்கள் பலர் உள்பட நூற்றுக்கணக்கானவர்கள், மலேசியாவிலும் இந்தோனேஷியா, தாய்லாந்திலும் கைது செய்யப்பட்டார்கள்.

இந்த அதிரடி நடவடிக்கைகளால், சற்றே பயந்த ஜமா மேலிடம், தாற்காலிகமாகத் தன் 'சமூக சேவை'களைக் கொஞ்சம் ஒத்திப் போடலாம் என்று முடிவு செய்தது. ஹம்பாலி உள்ளிட்ட மிச்சம் மீதி இருந்த தலைவர்கள் தலைமறைவானார்கள். பஷீருக்குச் சொந்தமான கல்வி நிறுவனங்கள் காலவரையற்று மூடப்பட்டன. பல அறக்கட்டளை போர்டுகள், இரவோடு இரவாகக் காணாமல் போயின. பிராந்தியத்தில் ஒவ்வொரு தொகுதி வாக்காளர் பட்டியலிலும் சில பெயர்கள் திடீரென்று இல்லாமல் ஆயின.

என்ன நடக்கிறதென்றே யாருக்கும் புரியவில்லை. ஒரு பக்கம், அமெரிக்க அரசின் இமாலயக் கோபம் மற்றும் யுத்த வெறித் தாண்டவம். இன்னொரு பக்கம், உள்நாட்டுப் பாதுகாப்புப் பிரச்னை கருதி, மலேசிய, சிங்கப்பூர், இந்தோனேஷிய அரசுகள் தன்னிச்சையாகவும் மேற்கொண்ட தற்காப்பு உத்திகள். உளவுத் துறையும் காவல் துறையும் தூக்கமற்ற துறைகளாகிப் போயின.

ஜமா இஸ்லாமியாவிலும் யாரும் தூங்கவில்லைதான். அவர்கள் சற்றே கலங்கியிருந்தார்கள். அந்தச் சூழ்நிலையில், அல் காயிதாவிடமிருந்து வழிகாட்டுதல்களோ, உதவிகளோ சாத்தியமில்லை என்பது அவர்களுக்குத் தெரியும். ஆப்கனிஸ்தானில் யுத்தம் படு தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. கந்தஹார், காபூல், ஜலாலாபாத் என்று ஏரியா ஏரியாவாக எரிந்து கொண்டிருந்தது. அல் காயிதாவின் பிற கிழக்காசிய நெட் ஒர்க் நண்பர் குழாத்தையும் தொடர்பு கொள்ள முடியவில்லை.

ஆப்கனிஸ்தானுக்குப் போய் அமெரிக்காவுக்கு எதிரான யுத்தத்தில் பங்கு கொள்ளலாம் என்று ஜமாவில் பலபேர் விரும்பினாலும், நடைமுறையில் அது சாத்தியமில்லை என்பது புரிந்திருந்தது. ஏதாவது ஒரு வகையில் அல் காயிதாவுக்கு ஆதரவாக, அதே சமயம் அமெரிக்காவை வெறுப்பேற்றும் வகையில், தம் செயல்பாடுகள் இருந்தே தீரவேண்டும் என்று ஹம்பாலி விரும்பினார்.

என்ன செய்யலாம் என்று பரபரவென்று யோசித்தார். அப்போது அவர் மலேசியாவில் இருந்தார். தங்கியிருந்த இடத்தை விட்டு ஒரு டீ குடிக்க வெளியே வந்தால் கூட ஆபத்து என்கிற நிலை. ஆனாலும், இது செயல்பட்டாக வேண்டிய தருணம் அல்லவா?

தமக்கு மிகவும் நெருக்கமான ஒரு மத போதகர் மூலம் பாங்காக்கில் இருக்கும் தன் சகாக்கள் இரண்டு பேருக்கு, ஒரு ரகசியச் செய்தியை அனுப்பினார் ஹம்பாலி. ரகசியம் என்றால் படு ராவான ரகசியம். குர் ஆனின் சில சூராக்களிலிருந்து தேர்ந்தெடுத்த வார்த்தைகளைக் கொண்டு, புதியதொரு அர்த்தம் தரத்தக்க பாடல் வரி போன்ற கடிதம் அது.

அந்தக் கட்டமைப்பை உடைத்து வார்த்தைகளை மாற்றிப் படித்தால், கடிதத்தின் செய்தி இப்படி இருக்கும்: 'விரைவில் ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யவும். நம் சகாக்கள் அனைவரையும் பாங்காக் வந்து சேரச் சொல்லவும். நான் பத்து நாளில் அங்கிருப்பேன்.'

நம்பவே முடியாத ஹாலிவுட் திரைப்படக் காட்சி போன்ற சம்பவங்கள் அடுத்தடுத்து நடந்தேறின.

ஹம்பாலி ஒரு பிச்சைக்காரன் வேஷம் அணிந்து, மலேசியாவின் எல்லையை நடந்தே கடந்து சிங்கப்பூருக்குச் சென்றார். அங்கிருந்து ஒரு சரக்குக் கப்பலில் ஏறி, உருளைக் கிழங்கு பீப்பாய்

ஒன்றினுள் ஒளிந்து கடந்து, தாய்லாந்தின் தலைநகரை அடைந்தார். கார்கோவில் கிடந்த உருளைக் கிழங்கு டப்பாக்கள் மூன்று நாள்கள் சீந்துவாரின்றி இருந்தன. ஒரு வாய் சோறு, தண்ணீர் இல்லாமல் உருளைக் கிழங்குகளோடு கிழங்காக ஹம்பாலியும் இருந்தார்.

நான்காவது நாள், அந்தக் கிழங்கு மூட்டைகளுக்குக் கதவு திறந்தன. கண்டெய்னர் லாரி ஒன்றில் கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான பொருள்களோடு பொருளாக ஹம்பாலி 'ஏற்றப்பட்டு', குறிப்பிட்ட இடத்துக்குப் பத்திரமாக வந்து சேர்ந்தார்.

2002 ஜனவரி இறுதியில் (சரியான தேதி தெரியவில்லை), அந்த ரகசியக் கூட்டம் நடைபெற்றது. பங்கு பெற்றவர்களின் எண்ணிக்கை 35. அத்தனை பேரும் ஜமா இஸ்லாமியாவின் பல்வேறு பகுதிகளின் கமாண்டர் அத்தனை பேரும் மிகக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த இடம் பாங்காக்கின் சந்தடி மிக்க சாலை ஒன்றில், காவல் நிலையத்துக்கு அடுத்த கட்டடம். (ஒருவேளை பின்புறக் கட்டடமாகவும் இருக்கலாம். இதற்கும் விவரம் சரியாக இல்லை. ஆனால், 'பாதுகாப்பு' கருதி, காவல் நிலையத்தை ஒட்டிய ஓரிடத்திலேயே இந்தக் கூட்டம் நடத்தப்பட்டதாக, பின்னாளில் கைதான ஜமா இஸ்லாமியா போராளி ஒருவர் வாக்குமூலம் அளித்திருக்கிறார்.) ஒலி புகாத மரத்தடுப்புகள் செய்யப்பட்டு, தாற்காலிகமாக உருவாக்கப்பட்டிருந்த ஒரு பாதாள அறையில் இக்கூட்டம் நடத்தப்பட்டிருக்கிறது.

ஹம்பாலி அந்தக் கூட்டத்தில் முன்வைத்த யோசனை இதுதான். பெரிய திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்த முடியாமல் போவதைக் காட்டிலும் ஆங்காங்கே, அடுத்தடுத்துப் பல சிறிய நாசகாரியங்களைத் தொடர்ச்சியாகப் போதிய கால இடைவெளியில் செய்து கொண்டே இருக்கலாம்!

'நாம் ஹோட்டல்களைக் குறி வைக்கலாம். நட்சத்திர ஹோட்டல்கள். குறிப்பாக, அமெரிக்க சுற்றுலாப் பயணிகள் அதிகம் நடமாடும் ஹோட்டல்கள். சுற்றுலாத் தலங்கள் அனைத்திலும் தலா ஒரு குண்டு என்று கணக்குப் போடுங்கள். எந்த இடத்தையும் விட்டு வைக்க வேண்டாம். எங்கெல்லாம் அந்நிய சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகிறார்களோ, அங்கெல்லாம் நாம் குண்டு வைக்கலாம். இதன்மூலம் தென்கிழக்காசிய நாடுகளுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறையும். சுற்றுலாப் பொருளாதாரம் படுக்கும். நம் மீது ஓர் அச்சம் பிறக்கும்..'

ஹம்பாலியின் யோசனை பெரிய எதிர்ப்புகள் ஏதுமில்லாமல் ஏற்கப்பட்டது என்றாலும், அவரது கமாண்டர்களில் சிலர், ஒரே ஒரு பெரிய காரியத்தையாவது செய்துதான் ஆகவேண்டும் என்று ஒற்றைக்காலில் நின்றார்கள்.

கிழக்காசிய நாடுகளின் முதுகெலும்பாகச் செயல்படும் சில முக்கிய எண்ணெய் நிறுவனங்களின் மீது (இவை பெரும்பாலும் அமெரிக்க நிறுவனங்கள்), தற்கொலைப்படைத் தாக்குதல்கள் நிகழ்த்தலாம் என்பது பலரது அபிப்பிராயமாக இருந்தது.

வேறு சிலர், மலேசியாவிலிருந்து பல குட்டித் தீவுகளுக்குக் கடல் மார்க்கமாகச் செல்லும் சில குடிநீர் பைப்லைன்களை வெடி வைத்துத் தகர்க்கலாம் என்று யோசனை தெரிவித்தார்கள். பல கோடிச் செலவில் ஆண்டுக் கணக்கில் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட பைப்லைன்கள் அவை. வெடித்து நாசமானால், சீரமைக்க மேலும் பல கோடிகளும் பல்லாண்டுகளும் ஆகும். தவிரவும், மக்களின் அமைதி வாழ்க்கையை முற்றிலுமாகச் சீரழித்துவிடக் கூடிய காரியமாக அது அமையும் என்பது அவர்களது எண்ணம்.

எண்ணெய் நிறுவனங்களின் மீது தாக்குதல் நடத்துவதைக் காட்டிலும், இந்த பைப்லைன்களை அழிப்பது அதிகம் கவன ஈர்ப்பு செய்யும் என்று பலபேர் அபிப்பிராயப்பட்டார்கள்.

வேறு சில கமாண்டர்கள், பெரிய பெரிய அடுக்குமாடிக் கட்டடங்களில் இயங்கும் அமெரிக்க

அலுவலகங்களையும், அதிக பாதுகாப்பு பந்தோபஸ்துகள் இல்லாத தூதரகங்களின் துணை அலுவலகங்களையும் தகர்த்துவிடலாம் என்று யோசனை சொன்னார்கள்.

சுமார் மூன்று நாள்கள் இந்த ஆலோசனை நடைபெற்றது. ஹோட்டல்கள், சுற்றுலாத் தலங்களில் குண்டு வைக்கிற யோசனை ஏகமனதாக ஏற்கப்பட்டது. கூடவே, சில குறிப்பிட்ட நேரடி அமெரிக்க இலக்குகளைத் தாக்கியே தீரவேண்டும் என்றும் முடிவானது.

அவற்றுள் முக்கியமானவை, சில எரிவாயு மற்றும் நிலக்கரிச் சுரங்கங்கள். யூனோகால், ஹல்லிபர்ட்டன், எக்ஸன்மொபைல், கால்டெக்ஸ், கொனோகோபிலிப்ஸ், யூனியன் டெக்ஸாஸ் ஆகிய பிரபல அமெரிக்க நிறுவனங்களுக்குச் சொந்தமான சுரங்கங்கள் அவை.

கொசுறாகச் சில அமெரிக்கப் பள்ளிக்கூடங்கள், இரவு விடுதிகளும் குறிவைக்கப்பட்டன.

ஒவ்வொருவருக்கும் திட்டங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டன. யார், எப்போது, எதைச் செய்யவேண்டுமென்று தீர்மானமானது. போதிய ஆள் பலம், ஆயுத பலம், பண பலம் இருக்கிறதா என்று உறுதி செய்து கொள்ளப்பட்டது.

எல்லாம் தயார். வேலையைத் தொடங்க வேண்டியதுதான் பாக்கி.